# 1857-ல் செங்கல்பட்டு

8



**செ**ன்னையை அடுத்து, தென்பகுதியில் அமைந்திருக்கும் கடற்கரை மாவட்டம் இது. செங்கல்பட்டு நகரமும் சென்னைக்கு அருகில் இருப்பதால், 1857-ம் வருட சுதந்திரப் போராட்ட காலத்தின் ஆரம்ப நாட்களில் இந்த மாவட்டம் ரகசிய தகவல் பரிமாறும் கேந்திரமாகவும், புரட்சிக் கருத்துகளுக்கும் சுதந்திர எழுச்சியை நோக்கி வீறு நடை போடுபவர்களின் செயல்பாடுகளுக்கும் உகந்த முக்கியமான இடமாகவும் திகழ்ந்து வந்தது.

1857 ஜூலையில் இரண்டு இந்து ஆலயங்கள் இந்தப் புரட்சிகரமான செயல்களுக்கு முக்கியமான இடங்களாகச் செயல்பட்டன. செங்கல்பட்டு நகரத்திலிருந்து மூன்று மைல் தென்மேற்கே உள்ள மணிபாக்கம் இதில் ஒன்று. இது கொஞ்சம் சிறிய கோயில்தான்! மற்றொன்று அளவில் பெரியது; அது செங்கல்பட்டிலிருந்து வடக்கேயுள்ள பல்லாவரம்!

இந்த இரண்டு இடங்களும் புரட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு ஏற்ற முக்கியப் பகுதிகளாக இருந்தன. இந்தப் பகுதிகளில் ஓரளவு செல்வாக்கும், புரட்சியாளர்களிடையே மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த இரண்டு பேர்,

இந்த எழுச்சிக்கு வித்தாகவும் முதன்மையான தலைவர்களாகவும் விளங்கினர். அருணகிரி மற்றும் கிருஷ்ணா என்பவர்களே அவ்விருவரும்! இந்த இரண்டு பேரும் ஜோதிடர்கள் என்பது ஆச்சர்யமான விஷயம்.

செங்கல்பட்டு இப்படி இருந்த நேரத்தில்தான் 1857 ஜூலையில் சுல்தான் பக்ஷ் என்பவர் மெட்ராஸிலிருந்து செங்கல்பட்டுக்கு வந்தார். இவர் டெல்லி பாதுஷா பகதுர்ஷாவின் குடும்பத்து அங்கத்தினர் என்பதால், அந்த சலுகையை வைத்து அவர் 'பென்ஷன்' வாங்குபவராகவும் இருந்தார்.

இப்பகுதி மக்களிடையே அவருக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கிடைத்திருந்தது. பிறகு அவர் அப்பகுதி மக்களிடையே ரகசியக் கூட்டங்களை நடத்தத் தொடங்கினார். உள்ளூர் முக்கியப் பிரமுகர்களும், புரட்சியாளர்களும் அவருடன் இணைந்து செயலாற்றத் தொடங்கினர். செங்கல்பட்டில் சுல்தான் பக்ஷுடன் புரட்சியாளர்களும் கைகோர்த்து வந்ததை கவனித்த அப்போதைய செங்கல்பட்டு சிவில் மற்றும் செஷன்ஸ் நீதிபதி, ஒரு கருத்தை மேலிடத்துக்கு தெரியப்படுத்தினார்.

அவர் அதில் கூறியிருந்தது:

"சுல்தான் பக்ஷ் செங்கல்பட்டு வந்திருப்பதன் நோக்கமே, ஜெயிலில் அடைபட்டுக் கிடக்கும் சிறைவாசிகளை உசுப்பிவிட்டு, சிறைக்கு வெளியில் திடீரென்று தான் ஏற்படுத்தப் போகும் புரட்சிக்கு அனுசரணையாகவும் ஆதரவாகவும் சிறைவாசிகளை கிளர்ச்சியில் ஈடுபட தயார்படுத்துவதே" (Madras, Judicial Department G.O.No. 1081 - A, dated 3,September 1857)

1857-ம் ஆண்டு ஜூலை 27-ம் தேதி இரவு, ஐநூறு முதல் அறுநூறு புரட்சியாளர்கள் செங்கல்பட்டின் தென்பகுதியில் உள்ள வாபங்குளம் தெப்பக்குளத்துக்கு அருகில் ஒன்றுகூடினர். மறுநாள் காலை 4 மணி வரையிலும் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

புரட்சிகர தலைவர்களான அருணகிரி மற்றும் கிருஷ்ணா ஆகிய இருவரும் அவர்களை வழிநடத்திக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான காரசாரமான வார்த்தைகள் சகஜமாக அவர்களிடையே உலா வந்து கொண்டிருந்தன.

ஐரோப்பியர்கள் பொதுவாக உடனடி தகவல் பரிமாற்றத்தின் மூலமே படைகளை அங்கும் இங்குமாக அனுப்பிக் கொண்டிருந்தனர். அதனை வைத்தே, குறிப்பிட்ட இடங்களில் ஏற்படும் புரட்சிகர நடவடிக்கைகளை தங்கள் ஆயுதபலத்தால் அடக்கிவிடுகின்றனர். எனவே அவர்களது தகவல் பரிமாற்ற யுக்திகளுக்கும், சக்திகளுக்கும், முட்டுக்கட்டை போட்டேயாக வேண்டும் என்பது, பலருடைய எண்ணமாகக் கிளர்ந்தெழுந்தது.



THE ELECTRIC TELEGRAPH.

INDIA.

(Opened to the Public on the 1st February 1855.)

Messages, (not exceeding 16 words,) can be sent at any distance not exceeding 400 Miles, at a charge of 1 Rupee.
Ditto Ditto Ditto 800 " " 2 Rupees.
Ditto Ditto Ditto 1,200 " " 3 "
Ditto Ditto Ditto 1,600 " " 4 "

No charge made for delivery within half-a-mile of the Office; a charge of 4 annas a mile for all distances beyond that.

The following Message from Meerut To Agra

from Name and Address Offg. Magistrate To Name and Address Offg. Secy. to Govt.

Number of Words. 43

Received the 85 prisoners this morning. All is quiet. asked for Assistance of Military Guard, is to be at Jail by Sunset. Sentence of eleven of the prisoners reduced by Genl: Hewitt to five years. The remainder to be imprisoned for ten—

Agra, Elec. Tel. Office. the 9 of May 1857

No inquiry respecting this Message can be attended to without the production of this paper.

Head Assistant in charge.

Please enter Time of delivery.

அந்தச் சூழ்நிலையில் அவர்களது முக்கிய இலக்காகத் தெரிந்தது, ஐரோப்பியர்களின் முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாக விளங்கிய தந்தி முறையே!

எனவே ஊரெங்கும் உள்ள தந்திக் கம்பங்களையும், தந்திக் கம்பி ஒயர்களையும் அறுத்து கம்பங்களைச் சாய்ப்பதென பலர் தாங்களாகவே உறுதி எடுத்துக் கொண்டனர்.

மேலும் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட இடத்தைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டு, தந்தி ஒயர்களை அறுத்து எறிவது என்றும், தந்திக் கம்பங்களை உடைத்து சாய்ப்பது என்றும் இலக்கினை நிர்ணயித்துக் கொண்டனர்.

ஜூலை 31 -ம் தேதி, மீண்டும் இதுபோன்ற கூட்டங்கள் மூலம் செங்கல்பட்டு நகர் மாபெரும் எழுச்சி கண்டது. இந்த எழுச்சி சுற்றிலும் உடனடியாகப் பரவத் தொடங்கியது. 1857 ஆகஸ்டு 8-ம்

தேதி, செங்கல்பட்டு மாஜிஸ்திரேட் சைதாப்பேட்டையில் இருந்து கொண்டு மெட்ராஸ் மாகாண அரசாங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தில், செங்கல்பட்டில் தொடர்ந்து பரவிவரும் இந்த அபாயகரமான 'தந்தி ஒயர் அறுப்புப் போராட்டத்தை' எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். அவரது கடிதத்தினைக் கண்டபிறகு, மெட்ராஸ் மாகாண அரசிடமிருந்து ஒரு உத்தரவு வந்து சேர்ந்தது.

அந்தக் கடிதத்தில், ''தந்தி ஒயர்களை அறுத்துப் போடும் சதிச்செயலைச் செய்பவர்களை சரியாகக் கண்காணித்து, அவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுக்கவும்'' என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.(Order of the Government of Madras No. 1012, dated 13th August 1857)

மேற்கண்ட இந்தச் செய்தியிலிருந்து, பிரிட்டிஷாரின் வெற்றிக்கு உடனடி தகவல் தொடர்பு எவ்வளவு தூரம் காரணமாயிருந்தது என்பதை நாம் அறியமுடிகிறது. தந்தி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அதை புதிய முறையில் வடிவமைத்து தங்களது உடனடி தகவல் பரிமாற்றத்துக்கு பிரிட்டிஷார் உபயோகித்துக் கொண்டனர்.

போர்களில் வெற்றி பெறுவதற்குத் தேவையான படைக்கலன்களையும், போர் வீரர்களையும் வேண்டிப் பெறுவதற்கும், வஞ்சக சதிச்செயல் புரிவதற்கும், ராணுவ நடவடிக்கை எடுக்கவும், கலவரத்தை அடக்குவதற்கும் என்ற ரீதியில் இந்தப் புதிய தகவல் தொடர்பு சாதனமான 'தந்தி' அப்போது அவர்களுக்கு பயன்பட்டது.

1857-1858 காலத்தில் நடைபெற்ற முதலாம் சுதந்திரப் போரின் புரட்சிக் கனலை அழிப்பதற்காக, 'இந்தத் தந்தி முறையை பிரிட்டிஷார் எவ்வளவு முக்கியமாகக் கையாள்கின்றனர்' என்பதை புரட்சியாளர்கள் அனைவரும் நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

தந்தி முறைதான், தங்களுடைய 'கைகள் கட்டப்பட்ட நிலையில்' இருப்பதற்கும், தாங்கள் ஒரே இடத்திலேயே முடங்கிக் கிடப்பதற்கும் காரணம் என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்து வைத்திருந்தனர். இவற்றையெல்லாம் வைத்துத்தான், தந்திக் கம்பி அறுக்கும் செயல்களும், தந்திக் கம்பங்களைச் சாய்க்கும் செயல்களும் புரட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் மெட்ராஸ் மாகாணத்தின் தகவல் சேவைக்காக, செங்கல்பட்டு பகுதியே முக்கியமான இடமாகத் திகழ்ந்தது. மாகாணத்தின் தென்பகுதியில் இருந்து வரும் அனைத்து கம்பித் தொடர்புகளும் கம்பங்களும் செங்கல்பட்டு வழியாகவே சென்னையைச் சென்றடைந்தன.

எனவே, செங்கல்பட்டில் நடத்தும் கம்பி அறுப்புச் செயலால், ஒட்டுமொத்த சென்னை மாகாண அரசுக்கே பெரும் தலைவலியைக் கொடுக்கலாம் என்பதுதான் புரட்சியாளர்களின் எண்ணமாக இருந்தது.

செங்கல்பட்டு பகுதியில் தந்திக் கம்பிகளை அறுப்பவர்களைக் கண்டுபிடித்து, தக்க தண்டனை வழங்குமாறு கூறிய சென்னை மாகாண அரசின் புதிய உத்தரவு புரட்சியாளர்களுக்குக் கிடைக்கப் பெற்றவுடன், அவர்கள் தாங்கள் ஏற்கெனவே 'சபதம்' எடுத்துக்கொண்ட அச்செயலை யாரும் அறியாவண்ணம் காரிருள் மண்டிக் கிடக்கும் இரவு நேரங்களில் செயல்படுத்த தீர்மானித்தனர். அதுவும் மின்னல் வேகத்தில் செய்து முடிக்கவும் தொடங்கினார்கள்.

இந்தச் சூழ்நிலையில், அருணகிரி மற்றும் கிருஷ்ணாவைப் பற்றிய தகவல்கள் பிரிட்டிஷாரின் கவனத்துக்குப் போனவுடன், போலீசார் உஷாராயினர். பல்வேறு சங்கடங்களுக்குப் பிறகு, முடிவில் அருணகிரியையும் கிருஷ்ணாவையும் கைது செய்தனர். அவர்கள் இருவருடன் சேர்ந்து, இன்னும் சில புரட்சியாளர்களும் கைதாயினர்.

இந்தக் குழுவின் 'தந்திக் கம்பி அறுப்பு' விஷயம் எல்லா இடங்களுக்கும் தெரிந்துவிட்டால், இதுபோன்ற நூதனச் செயல்களில் பலரும் ஈடுபடலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, இவர்களின் கைதும் பிரிட்டிஷாரால் மிகவும் சாதாரணமாகக் கூறப்பட்டது.

பல்வேறு ரகசியக் கூட்டங்களை நடத்தினார்கள் என்றும், மக்களை ஒருங்கிணைத்து அரசுக்கு எதிராகத் தூண்டினார்கள் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

குறிப்பாக 1857-ம் ஆண்டு ஜூலை 27 மற்றும் 31-ம் தேதிகளில் கூட்டம் கூட்டி, பிரிட்டிஷாருக்கு எதிராக மக்களை கலகம் செய்யத் தூண்டினர் என்று குற்றம் சாட்டப்பட்டு, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இருப்பினும் வேறு வழியின்றி 'தந்திக் கம்பம் அறுப்பு' விஷயம் கூறப்பட்டு, தகுந்த தண்டனைக்கு பரிந்துரைக்க வேண்டியதாயிற்று. ஆயினும் சரியான சாட்சியம் இல்லாததால், ஆளுக்கு இரண்டு உத்தரவாதம் (ஜாமீன்) தாக்கல் செய்ய வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் நான்கு மாத சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பானது. அதுபோல் சுல்தான் பக்ஷ் மற்றும் ஆதரவாளர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

சுல்தான் பக்ஷ் நீதிமன்றத்தில் ஒரு உத்தரவாதம் அளிக்க வேண்டியதாயிற்று.

"முன்னறிவிப்பு இன்றியோ பிரிட்டிஷாரின் அனுமதி இன்றியோ சென்னை நகரை விட்டு வெளியே செல்லக்கூடாது; அதேசமயம் செங்கல்பட்டுக்குச் செல்ல நேர்ந்தால் டெல்லி ராஜாவின் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் மரியாதை கிடைப்பதுடன், அவர் மீதான கண்காணிப்பும் அதிகப்படுத்தப்படும்.

"இதேபோன்று மீண்டும் பிரிட்டிஷாருக்கு விரோதமான முறையில் நடந்துகொண்டால், அவரது அலவன்ஸை அவர் இழக்க நேரிடும். பிரிட்டிஷார் அதை பறிமுதல் செய்வர். மேலும் அவர் சென்னையிலேயே இருக்கும்பட்சத்தில் அஜாக்கிரதையான வார்த்தைகளைப் பேசக்கூடாது" என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அத்துடன் சென்னையில் தங்கியிருக்கும் டெல்லி பென்ஷனர்கள், பொதுவாக சென்னையை விட்டு வெளியே எங்கும் செல்லக்கூடாது எனவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. (Fort St. Goerge, Judicial Consultation No. 71 of 4.8.1857)

மெட்ராஸ் மாகாண அரசு செங்கல்பட்டு மாஜிஸ்திரேட்டுக்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்தியது. 'சென்னை போலீஸ் கமிஷனரால் தண்டனை வழங்கப்பட்டு, செங்கல்பட்டுக்கு அனுப்பப்படுபவர்களிடம் மிகுந்த கவனம் வேண்டும். அவர்கள் மிகவும் அபாயகரமானவர்கள். தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் இன்றி, அவர்களை வெளியில் உலவவிடுவது, அபாயத்தைத் தோற்றுவிக்கும்' என்று அது செங்கல்பட்டு மாஜிஸ்திரேட்டை வலியுறுத்தியது. (Ibid., Nos. 63 - 64 of 11.08.1857).

அதன்பிறகு செங்கல்பட்டு மாஜிஸ்திரேட்டுக்கு சில விவரமான அறிக்கைகளை தயார் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. செங்கல்பட்டில் நடந்த சம்பவங்களுக்கு முக்கியமான காரணகர்த்தர்களான இரண்டு இந்து ஜோதிடர்களும், சுல்தான் பக்ஷ் என்ற ஒரு முகமதியரும் செங்கல்பட்டில் என்னென்ன ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று அறிந்து, மேலிடத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டிய வேலையில் அவர் இறங்கினார்.

மிகப் பெரிதாக நடந்த செங்கல்பட்டு எழுச்சியை பிரிட்டிஷ்காரர்கள் தங்களது இரும்புக் கரங்களால் பெரும் சிரமத்துக்கிடையே அடக்கினர். தேசதுரோக குற்றம் சாட்டப்பட்டவர்கள், ஸ்பெஷல் கமிஷனரது மேற்பார்வைக்கு 1857-ம் வருடத்தின் விதி எண் 14-ன் கீழ் கொண்டு செல்லப்பட்டனர்.

சையத் ஹமீத் ஜிலுல் என்ற செங்கல்பட்டு கோர்ட் முன்ஷி, மேற்குறிப்பிட்ட சட்ட விதியின் கீழ், தேசதுரோக நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு தண்டனைக்குள்ளானார்.